## III வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## O.S.No. 43/2023

2025 வது ஆண்டு ஜுன் மாதம் 30 ம் நாள் பி.வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) இளநிலை உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது. பி.வா.சா.1 ராதாகிருஷ்ணன்

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) இந்த வழக்கு விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது ஆவணங்கள் வாயிலாக மட்டும்தான் தெரியும் என்றால் சரிதான். எதிர் வழக்குரை யாரால் சொல்லி தயார் செய்யப்பட்டது என குறிப்பிட்டு பெயர் சொல்ல இயலவில்லை ஆனால் எனக்கு முன்பு இருந்து தாசில்தார் ADW சொல்லி தயார் செய்யப்பட்டது தான்.

2) இந்த வழக்கு சொத்து 22 தனி நபர்களுக்கு ஒதுக்கப்பட்டது என எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளதற்கு எதேனும் ஆவணம் தாக்கல் செய்யபட்டுள்ளதா என்றால் இல்லை கோப்பை பார்த்து அவ்வாறு சொன்னேன்.

3) பி.வா,சா.ஆ.1 ல் மாதம் வருடம் மட்டும்தான் காணப்படுகிறது என்றால் அலுவலர் கையொப்பத்தில் தேதி காணப்படுகிறது. அதுபோன்று பி.வா,சா.ஆ 2 ல் தேதி என இருக்கும் இடத்தில் தேதியே குறிப்பிடப்படவில்லை என்றால் அலுவலர் கையெழுத்தில் காணப்படுகிறது.

4) அரசு அலுவலகத்தில் ஆவணங்கள் அல்லது கடிதங்கள் தயார் செய்யப்படும் தேதியிலேயே தான் அலுவலர் கையெப்பம் இடுவார் என்றால் அதே தேதியில் தான் கையொப்பம் இடுவார்.

5) அதுபோன்று ஆவணங்களில் தயார் செய்த பின்பு அந்த கடிதங்கள் சரியாக தயார் செய்யப்பட்டிருந்தால் மட்டும்தான் அலுவலர் கையொப்பம் செய்வார் இல்லை எனில் திருத்தி வர சொல்லி திருத்தப்பட்டு பின் சரிபார்த்த பின் கையொப்பம் செய்வார்.

6) பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 பின் தேதியிட்டு தயார் செய்யப்பட்டது என்றும் அது இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதில்

தேதி இருந்திருந்தால் மட்டும் தான் அலுவலர் கையொப்பம் செய்திருப்பார் எனவே இது பொய்யாக உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

7) பி.வா.சா.ஆ.2 ல் யார் மூலம் கையெழுத்து பெறப்பட்டது என்று கேட்டால் கிராம நிருவாக அலுவலர் மூலம் பெறப்பட்டது. பி.வா.சா.ஆ.2 ல் வெ. பேச்சியம்மாள், ரா.பேச்சியம்மாள், மற்றும் மா.அலமேலம்மாள் அவர்களின் கைநாட்டு மட்டும் தான் பெறப்பட்டுள்ளது. அதில் வெ, பேச்சியம்மாள் அவர்களின் மை நிறம் மற்றும் மற்ற இருவர்கான மை நிறம் வேறுவிதமாக உள்ளது என்றால் சரிதான்.

8) அந்த 3 கைரேகைகளுக்கு கீழே இன்னாரின் கைநாட்டு என எழுதப்பட்டுள்ள எழுத்தின் மை ஒரே நிறமாக தான் உள்ளது என்றால் சரிதான். அதை எழுதிய கையெழுத்தில் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். அந்த கையெழுத்துக்கள் எல்லாம் ஒரே நாள் 08.01.2004 பெறப்பட்டது என உள்ளது என்றால் சரிதான். எனவே அந்த நாளில் அதே கிராம நிருவாக அலுவலர் மூலமாக தான் சார்பு செயப்பட்டிருக்கும் என்றால் இருக்கலாம் அவர்களது தலையாரியும் உதவியிருக்கலாம். 2004 ல் சிவந்திபட்டி கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலங்கள் இது தவிர வேறு இல்லை எனதான் கோப்பில் தெரிகிறது. அதே காலகட்டத்தில் சிவந்திபட்டி கிராமத்தில் வேறு அரசு புறம்போக்கு நிலங்களும் இருந்தது ஆனால் நான் வழக்கிற்காக அரசாங்கத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா,சா.ஆ.4 ல் வாதியின் வாக்குமூலம் அதுபோல் மற்றவர்களின் வாக்குமூலத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு எதேனும் சிறப்பு காரணங்கள் உள்ளனவா எனகேட்டால் இவர் மட்டும் தான் வழக்கு கொடுத்ததனால் அவரது வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளோம்.

9) வாதி மற்றும் நிலம் கையெகபடுத்தப்பட்ட மற்ற பட்டாதாரர்களின் வாக்குமூலத்தின் அசல்களை கோப்பில் இருக்கிறது என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். அனைவரது வாக்குமூலத்திலும் ஒரே முறையாக ஒன்றுபோல் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னாலும் அதில் காணப்படும் சங்கதிகளும் பெயர்களை தவிர ஒன்றாக உள்ளது என்றால் சரிதான்.

10) வாக்குமூலங்கள் யாவும் வாதியின் நிலத்தை கையெகப்படுத்துவதற்காக பின் தேதியிட்டு தயார் செய்யப்பட்டு ஒன்று என்று சொன்னால் சரியல்ல. பி.வா,சா.ஆ.2 ல் வாதியின் கையொப்பம் செண்டு இசக்கி அம்மாள் என காணப்படுகிறது என்றால் சரிதான். அதுபோல் வாதியின் கையொப்பம் பி.வா,சா.ஆ.4 ல் பி. செண்டு என காணப்படுகிறது. அதுபோல் எனது நிருபண வாக்குமூலத்திலும் எதிர் உரையிலும் நிலம் கையெகப்படுத்திய பின் வைப்பீடுகள் வைக்கப்பட்ட LAOP வழக்கு விவரங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

11) கையெகப்படுத்தப்பட்ட நிலங்களை 22 ஆதி திராவிட நபர்களுக்கு ஒதுக்கப்பட்ட து என நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் அதற்கு ஆவணங்கள் என் கோப்பில் உள்ளதா என்றால் உள்ளது. அவர்களின் பெயர் பானுமதி, முத்தழகி, கலாவதி, மகராசி, காந்தி, பேச்சியம்மாள், கவிதா, மாடத்தி, கற்பும்மாள், ராஜம்மாள், விஜயா, சாந்தி, செல்லம்மாள், ஜெயலெட்சுமி, ராணி, வசந்தி, பேச்சியம்மாள், தங்கம், மாடகண்ணு, செல்வி, சுந்தரி மற்றும் சீதாலெட்சுமி ஆகியோர்கள். அந்த கடைசி 2 நபர்களுக்கு தனியாக பட்டா வழங்கியதற்கு சிறப்பு காரணம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

12) வாதியோ மற்ற பட்டாதாரர்களோ எத்தனை முறை ஆதி திராவிட நலத்துறை அலுவலத்திற்கு வந்து சென்றுள்ளார்கள் என ஆவணங்களை பார்த்தால் துலங்குமா என கேட்டால் வாக்குமூலம் கொடுக்க வந்தது பற்றி மட்டும் தெரியும். அனைவரது வாக்குமூலத்திலும் 23.01.2004 தேதியில் மட்டுமே அனைவரது வாக்குமூலங்களும் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் பின் தேதியிட்டு தாக்கல் செய்யப்பட்ட பின்பு மற்றும் அவைகள் அனைத்தும் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. இந்த வாதியின் நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற ஒரே கெட்ட எண்ணத்தில் இவ்வாறு ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.வழக்கு விபரங்கள் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது விசாரணை நடைபெற்றதாக சொல்லப்படும் காலக்கட்டத்தில் இருந்து அலுவலரை விசாரித்தால்

மட்டுமே உண்மை துலங்கும் எனவே எனது சாட்சியம் ஏற்றுகொள்ளதக்கது அல்ல என்றாலும் பிராது படி இந்த வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

R T S KANNAN

Digitally signed by R T S KANNAN
Date: 2025.06.30 07:36:21 +0530